


**அமரர் திருவாளர் கனகசபை பாஸ்கரன், இணைப்பாளர் (தொடருறு கல்வி) அவர்களின் சேவைகளை நினைவு கூரும் சிறப்புப் குருதீபம் செய்தி மடல்.**



## பீடாதிபதியின் செய்தி

குருதீபம் 36வது இதழுக்குக் கனத்த இதயத்துடன் செய்தி வழங்குகின்றேன்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கடந்த 20 வருடத்திற்கு மேலாக மிக உன்னதமான, அர்ப்பணிப்பான சேவையை ஆற்றி வந்த விரிவுரை இணைப்பாளர் (தொடருறு கல்வி) அமரர் திரு.கனகசபை பாஸ்கரன் அவர்களின் மறைவு நம் எல்லோர் மனதிலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. அமரர் திரு. கனகசபை பாஸ்கரன் அவர்கள் எம்முடன் இல்லை என்ற செய்தியை இன்னும் கூட என் மனம் ஏற்க மறுக்கின்றது.

மாணவ ஆசிரியர்களின் விருத்தி அவர்களது வளர்ச்சி இவ்விரண்டையுமே நோக்கமாகக் கொண்டு தனது ஒவ்வொரு செயற்பாடுகளையும் அமரர் திரு.கனகசபை பாஸ்கரன் அவர்கள் மேற்கொண்டு வந்தார். எந்த விதமான பேதங்களுமின்றி மாணவ ஆசிரியர்கள் அனைவரையும் ஒரே விதமாக வழிப்படுத்துவதில் சிறந்து விளங்கியதன் காரணமாக மாணவ ஆசிரியர்கள் அனைவரது மனங்களிலும் அவர் நீங்கா இடம் பிடித்துள்ளார்.

கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் அவர் கடைப்பிடித்த தனிப்பாணி மாணவ ஆசிரியர்களை மாத்திரமன்றி எமது விரிவுரையாளர் குளாத்தினையும் பெரிதாக கவர்ந்திருந்தது. அவரைப் பின்பற்றிச் செயற்படுகின்ற பல்லாயிரக் கணக்கான ஆசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களை நான் அவதானித்திருக் கின்றேன்.

**தொடர்ச்சி 2ம் பக்கத்தில்...**

## கண்ணீர் அஞ்சலிகள்



**அமரர் திருவாளர். கனகசபை பாஸ்கரன்**
**இணைப்பாளர் (தொடருறு கல்வி)**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**கோப்பாய்.**

சொல்லவொணாத் துயரத்தில் எம் எல்லோரையும் ஆழ்த்தி கடந்த 03.03.2022 அன்று இறைவனடி சேர்ந்த அமரர் திருவாளர் கனகசபை பாஸ்கரன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பீடாதிபதி மற்றும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தினர்.**

This News letter was published by Jaffna National College of Education, Kopay on 02nd April 2022

***போசகர்***

திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்
பீடாதிபதி

***ஆலோசகர்கள்***

செல்வி.செ.செல்வமலர்
திரு.தி.ஜெயகாண்டீபன்

உப பீடாதிபதிகள்

***பிரதம ஆசிரியர்***

திரு.ம.நிரேஸ்குமார்

***இணை ஆசிரியர்கள்***

திரு.சி.முகுந்தன்

திருமதி.ஜெ.உதயகுமார்

திருமதி.ஞா.கணேசநாதன்

திருமதி.சு.விக்னமோகன்

திரு.ப.இராஜேஸ்வரன்

திரு.பொ.விஜயகுமாரன்

கலாநிதி.எஸ்.பத்மராசா

திரு.அ.லோகநாதன்

திரு.து.இளங்குமரன்

***வெளியீடு***

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.
021 223 0036
Jaffnancoe@hotmail.com
www.jaffnancoe.lk

**பீடாதிபதியின் செய்தி தொடர்ச்சி...**

அண்மைக் காலங்களில் அவரது செயற்பாடுகள் மிக உன்னதமாக நிலையை அடைந்திருந்தன. மாணவ ஆசிரியர்களை உள்ளகப் பயிற்சிக்காக இணைத்தல், பொறுப்பு விரிவுரைய-ாளர்களை நியமித்தல், மேற்பார்வை செய்தல் என்பவற்றில் மிகவும் திறமையானவர். மாணவ ஆசிரியர்கள் நிறைவேற்ற வேண்டிய பணிகளை அந்தந்த காலங்களில் நிறைவேற்றச் செய்வதில் மிகவும் இறுக்கமான நடைமுறைகளைப் பின்பற்றுவார். ஆனாலும் அந்த இறுக்கத்தை மாணவ ஆசிரியர்கள் பெரிதும் இரசித்து ஏற்றுக் கொண்டதை அவர்களது பிரதி பலிப்புக்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

அமரர் திரு.கனகசபை பாஸ்கரன் அவர்கள் கல்லூரி நிர்வாகத்துடனும் மிக நெருக்கமாக இணைந்து செயற்பட்டு வந்தவர். வழங்கப் படுகின்ற அனைத்து பணிகளையும் நிறைவேற்று வதில் வல்லவர். எந்தவொரு செயற்பாடாக இருந்தாலும் அர்ப்பணிப்பு, விடாமுயற்சி, திருத்தம், சரியான வழிமுறைகளைக் கடைப்பிடித்தல் என்பவற்றில் மிகவும் திறமையானவர்.

எல்லோரையும் சாதுரியமாக இணைத்துக் கொண்டு தனது பணிகளை நிறைவேற்றுதல் அவரது இன்னுமொரு சிறந்த இயல்பு. அவரது இவ்வியல்பினால்தான் அதிகளவான நண்பர்களைப் பல்வேறு மட்டங்களிலும் அவர் கொண்டிருந்தார். அவரது இறுதிச் சடங்குகளின் போது இளைப்பாறிய அரச அதிபர், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத் தரணிகள், கல்விப் பணிப்பாளர்கள், நிர்வாகிகள், விரிவுரையாளர்கள் எனப் பெருந்தொகையானோரின் பிரசன்னம் இருந்தது.

தனது கல்வித் தகைமைகளை மேம்படுத்தியது மாத்திரம் இல்லாமல் தான் பெற்ற அறிவையும், அனுபவங்களையும் பல்வேறு புத்தகங்களாக எழுதிக் கல்வி உலகுக்கு அளித்துள்ளார். அவரது புத்தகங்கள் கல்வியுலகில் மிகப் பரந்த செல்வாக்கினைச் செலுத்தி வருகின்றன.

அவரது குடும்ப வாழ்க்கையிலும் மிகவும் உன்னதமான நிலையை அடைந்திருந்தார். ஒரு மகனாக, சகோதரனாக, கணவனாக, அன்பான அப்பாவாக, சிறந்த உறவினராக, நண்பனாக பல்வேறு நிலைகளில் அவர் தனது குடும்ப உறவுகளை அனுசரித்து அரவணைத்து நடந்திருக்கின்றார்.

தனது இரண்டு பிள்ளைகளையும் மிகவுயர்ந்த நிலைகளுக்கு இட்டுச் சென்றுள்ளார். அவர்கள் இருவரும் எதிர்காலத்தில் மிகச் சிறந்த கல்விமான்களாக வாழ்வதற்கும் இந்த சமுதாயத்தில் சேவையாற்றுவதற்கும் எனது ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்ப உறவுகளுக்கு எவ்வாறு ஆறுதல் சொல்வதென்று தெரியவில்லை. அவர்களுக்கான மன தைரியத்தையும் ஆசிகளையும் வழங்க வேண்டும் என இறையருளை மனதார வேண்டி அமரர் திரு.கனகசபை பாஸ்கரன் அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து விடை பெறுகின்றேன்.

நன்றி.

**பீடாதிபதி**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**கோப்பாய்.**

**அமரர் திருவாளர் கனகசபை பாஸ்கரன், இணைப்பாளர் (தொடருறு கல்வி) அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவைகளின் சில பதிவுகள்...**
















This News letter was published by Jaffna National College of Education, Kopay on 02nd April 2022

**அமரர் திருவாளர் கனகசபை பாஸ்கரன், இணைப்பாளர் (தொடருறு கல்வி) அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவைகளின் சில பதிவுகள்...**





















This News letter was published by Jaffna National College of Education, Kopay on 02nd April 2022

**அமரர் திருவாளர் கனகசபை பாஸ்கரன், இணைப்பாளர் (தொடருறு கல்வி) அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவைகளின் சில பதிவுகள்...**















This News letter was published by Jaffna National College of Education, Kopay on 02nd April 2022

**அமரர் திருவாளர் கனகசபை பாஸ்கரன், இணைப்பாளர் (தொடருறு கல்வி) அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவைகளின் சில பதிவுகள்...**









**அமரர் திரு.கனகசபை பாஸ்கரன் அவர்களின் ஆசிகளுடன் மாணவ ஆசிரியர்களை உள்ளகப் பயிற்சிக்காக நியமித்த நெகிழ்ச்சியான தருணத்தில்....**







